**வாக்குமூலம்**
**சார்பு நீதிமன்றம், ஒட்டன்சத்திரம்.**
**M.C.O.P.No.320/2022**
**வழக்கு சாட்சி PW.1**
**1873ம் ஆண்டின் 10வது விதியின்படி திருமதி.என்.வி.அமுதா அவர்களால் திறந்த நீதிமன்றத்தில் சத்தியப்பிரமாணம் செய்விக்கப்பட்டு ஆணையிட்டு உறுதி கூறப்படுகிறது.**

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : யோகேஷ் | தொழில் | : வேலை இல்லை |
| தகப்பனார் பெயர் | : சின்னச்சாமி | கணவர் பெயர் | : --- |
| கிராமம் | : தீர்த்தாக்கவுண்டன் வலசு | வயது | : சுமார் 25 |
| தாலுக்கா | : ஒட்டன்சத்திரம் | நாள் | : 06.08.2025 |
| மாவட்டம் | : திண்டுக்கல் | | |

2ம் எதிர்மனுதாரர் தரப்பில் மேற்கொள்ளப்படும் குறுக்கு விசாரணை:-

நான் பயணம் செய்த TN 94 Y 0556 என்ற இருசக்கர வாகனத்திற்கான பதிவு சான்று, காப்பீட்டு சான்று மற்றும் வாகன்தை ஓட்டிச் சென்ற செல்வராஜ் என்பவரின் ஓட்டுநர் உரிமம் ஆகியவைகளை முன்னிலைப்படுத்தவில்லை என்றால் ? இல்லை. TN 94 Y 0556 என்ற இருசக்கர வாகனத்திற்கான மோட்டார் வாகன ஆய்வறிக்கையை தாக்கல் செய்துள்ளேனா என்றால் ? இல்லை. மேற்படி மோட்டார் வாகன ஆய்வறிக்கையில் இருசக்கர வாகனத்திற்கான காப்பீட்டு சான்று மற்றும் ஓட்டுநர் உரிமம் ஆகியவைகள் வாகன்தை ஆய்வுக்கு முன்னிலைப்படுத்தாததால் இவ்வழக்கில் ஆய்வறிக்கையை தாக்கல் செய்யவில்லை என்றால் ? சரியல்ல. மோட்டார் வாகன ஆய்வறிக்கையில் சோதனை அறிக்கை தாக்கல் செய்துள்ளதாக உள்ளதால் ஆய்வறிக்கையை தாக்கல் செய்யவில்லை என்றால் ? சரியல்ல. விபத்து சமயத்தில் நானும், வாகனத்தை ஓட்டிசென்ற செல்வராஜ் என்பவரும் தலைக்கவசம் அணியவில்லை என்றால் ? ஆமாம். அணியவில்லை. செல்வராஜ் தான் இருசக்கர வாகனத்தை ஓட்டுநர் உரிமம் இல்லாமல் அதிவேகமாக இயக்கி விபத்தினை ஏற்படுத்திவிட்டார் என்றால் ? சரியல்ல. விபத்திற்கு நான் பயணம்

செய்த மோட்டார் வாகனத்தில் செல்வராஜ் என்பவர் கவனக்குறைவாக வாகனத்தை ஓட்டியதால் தான் விபத்திற்கு காரணம் என்றால் ? சரியல்ல. விபத்து ஏறப்பட்டவுடன் நான் எங்கு சென்று சிகிச்சைக்கு சேர்ந்தேன் என்றால் ? அரசு மருத்துவமனை பழனி ஆகும். அரசு மருத்துவமனை பழனியில் சிகிச்சைக்கு சேர்ந்ததற்கான ஆதரவுகளை வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றால் ? சரியல்ல. தாக்கல் செய்துள்ளேன். நான் பழனியில் உள்ள சஞ்சை மருத்துவமனையில் 20.01.2021 முதல் 23.01.2021 வரை உள்நோயாளியாக இருந்து சிகிச்சை பெற்று வந்ததாக சொல்லியுள்ள நிலையில் அதற்கான ஆதரவுகளை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் ? சரிதான். தாக்கல் செய்யவில்லை. 23.01.2021ம் தேதியில் இருந்து 10.02.2021 வரை தொடர் சிகிச்சை மேற்கொண்டதற்கான எந்தவொரு ஆவணமும் தாக்கல் செய்யவில்லை என்றால் ? சரிதான். 10.02.2021 முதல் 13.02.2021 வரை கோவை ஆர்த்தோ ஒன் கேர் மருத்துவமனையில் சிகிச்சை மேற்கொண்டேன் என்றால் ? சரிதான். பின்னிட்டு 3முறை வெளிநோயாளியாக சிகிச்சை மேற்கொண்டேன் என்றால் ? சரிதான். 17.04.2021 க்கு பிறகு எந்தவித தொடர் சிகிச்சையும் பெற்றுக் கொள்ளவில்லை என்றால் ? சரிதான். எனக்கு ஏற்பட்ட காயங்கள் கடந்த 2021–ம் ஆண்டே குணமாகிவிட்டதால் எந்தவித ஊனக்குறைபாடும் இல்லை என்றால் ? சரியல்ல. விபத்து ஏற்பட்ட சமயத்தில் நான் M.I.Life styly marketing Glopal Private Limted என்ற M.L.M கம்பெனியில் பணிபுரிந்து மாதம் ரூ.15,000 சம்பாதித்து வந்தேன் என்றாலும், அதற்கு எந்தவித ஆவணங்களும் தாக்கல் செய்யவில்லை என்றாலும் ? சரிதான். பின்னிட்டு நான் வேலை பார்த்து வந்ததற்கான ஆவணங்களை தாக்கல் செய்யவில்லை என்றால் ? ஆமாம். நான் எந்த வேலைக்கும் செல்லாத நிலையில் வழக்கிற்காக வேண்டி வேலைக்கு சென்றதாக பொய்யாக சொல்கிறேன் என்றால் ? சரியல்ல. விபத்தானது மோட்டார் சைக்கிள் ஓட்டுநரான செல்வராஜ் என்பவரின் கவனக்குறைவால் ஏற்பட்டது என்பதால் அந்த உரிமையாளரையும், அந்த

காப்பீட்டு நிறுவனத்தையும் இவ்வழக்கில் தரப்பினர்களாக சேர்க்கவில்லை என்பதால் நான் தாக்கல் செய்துள்ள மனு நிலைக்கத்தக்கது அல்ல என்றால் ? சரியல்ல. 1–வது எதிர்மனுதாரரின் வாகனத்திற்கு தற்காலிக பதிவு சான்று உள்ளது என்றால் ? ஆமாம். கடந்த 17.06.2021–ம் தேதி தான் வாகனம் பதிவு செய்யப்பட்டுள்ளது என்றும் வாகனத்திற்கான அனுமதி சான்றிதழ் (Permit) தான் வழங்கப்பட்டுள்ளது என்றால் ? சரிதான். பாலிசி விதிறீல் ஏற்பட்டுள்ளதால் 2–ம் எதிர்மனுதாரர் எந்தவித இழப்பீடும் செலுத்த வேண்டியதில்லை என்றால் ? சரியல்ல. மனுவில் கோரியுள்ள தொகை அதிகப்படியானது என்றால் ? சரியல்ல.

C JAYAPPRAKASH
Digitally signed by C JAYAPPRAKASH
Date: 2025.08.06 10:51:10 +0530

சார்பு நீதிபதி
ஒட்டன்சத்திரம்